[1972 ஆகஸ்ட் 12

Agricultural Engineering Workshop

*109 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether there is any proposal to expand the Agricultural Engineering Workshop at Washermanpet, Madras; and

(b) if so, the details of the same?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: (அ) ஆம்.

(இ) இந்தப் பணிக்களரியில் கூடுதல் ஆட்களைக் கொண்டும், இயந்திரங்களைக் கொண்டும், விரிவுபடுத்தவும், 12 பெர்க்குஸன் டிரில் கருவிகளையும், 3 ரோட்டரி டிரில் கருவிகளையும் தயாரிப்பதற்காகவும் ரூ. 10.87 லட்சம் செலவில் அடங்கல் திட்டமொன்றை வேளாண்மைத் துறை இயக்குநர் பணித்தனுப்பியுள்ளார். தற்போதைய நிதி நிலை காரணமாக இத்திட்டம் 1972 அக்டோபர் வரை ஒத்திப் போடப்பட்டுள்ளது. இதன் பிறகு இது ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

பருத்தி சாகுபடி

*110. வின—திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தீவிர சாகுபடித் திட்டத்தின் கீழ் இவ்வாண்டு பல்லடம் வட்டத்தில் எத்தனை எக்கர் நிலத்தில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டுள்ளது?

(இ) அதற்கு அரசாங்கம் என்ன உதவிகள் அளித்துள்ளது?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) & (இ): தீவிர சாகுபடி திட்டத்தின் கீழ் பல்லடம் வட்டத்தில் பருத்தி பாசனப் பயிராக 31,220 எக்கரிலும் மானாவாரிப் பயிராக 21,720 எக்கரிலும் பயிரிடப்பட்டு வந்தது. 1—8—1971 முதல் மத்திய அரசின் முழு ஆதரவுடன் பருத்தி தீவிர அபிவிருத்தி திட்டம் செயல்படத் தொடங்கி, மேற்குறிப்பிட்ட 31,220 எக்கர் இப்புதிய திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. எனவே, பல்லடம் வட்டத்தில் தற்போது தீவிர சாகுபடித் திட்டத்திற்குப் பதிலாக மத்திய அரசு ஆதரவுடன் பருத்தி தீவிர அபிவிருத்தித் திட்டம் செயல்பட்டு வருகிறது. மானாவாரி நிலமான 21,720 எக்கர்களில் மாநில பருத்திப் பெருக்குத் திட்டம் செயல்படுகிறது.